முழுப்பதிப்புரிமையுடையது
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
Provincial Department of Education, Northern Province

| 53 | T | I,II |
|---|---|---|

# கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (உயர் தரம்) முன்னோடிப் பரீட்சை - 2021
# General Certificate of Education (Advance. Level) Pilot Exam - 2021

| பரத நாட்டியம் I, II<br>Bharatham I, II | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |
|---|---|

**கவனிக்குக.**

**பகுதி 1 இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும் பகுதி 2 இல் விரும்பிய மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி 1

1. நீர் கற்ற பதவர்ணத்தின்
   1. இராகம், தாளம், நாயகன், நாயகி என்பவற்றைத் தருக. (4 புள்ளிகள்)
   2. முதலாவது சரண ஸ்வரக் கோர்வையின் சொற்கட்டினைத் தாள, அங்கக் குறியீடுகளுடன் எழுதுக. (6 புள்ளிகள்)
   3. அனுபல்லவியில் இடம்பெறும் முதலாவது தீர்மானத்தின் சொற்கட்டினைத் தாள, அங்கக் குறியீடுகளுடன் எழுதுக. (10 புள்ளிகள்)

2. கதக் என்னும் சாஸ்திரிய நடனத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை விளக்குக.
   1. தோற்றம், வளர்ச்சி (4 புள்ளிகள்)
   2. இசை,இசைக்கருவிகள் (4 புள்ளிகள்)
   3. ஆடை,அணிகலன்கள் (4 புள்ளிகள்)
   4. ஆடல்முறைகள் (8 புள்ளிகள்)

3. நவரஸங்களை அடிப்படையாகக் கொண்டு
   1. விபாவம் என்பதன் இரு வகைகளையும் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)
   2. ரௌத்திரரஸம் பற்றி விளக்கி எழுதுக. (6 புள்ளிகள்)
   3. சிருங்காரரஸத்தின் பிரிவுகளைக் குறிப்பிட்டு, அவற்றை விளக்குக. ( 10 புள்ளிகள

## பகுதி 11

4.

1. நடராஜ திருவுருவம் குறித்து நிற்கும் பஞ்சகிருத்தியங்களைத் தருக. (5 புள்ளிகள்)
2. இத்திருவுருவத்தின் பாகங்களையும் அவை குறித்து நிற்கும் தத்துவங்களையும் விளக்குக. (15 புள்ளிகள்)

5. பரதநாட்டியத்திற்கு பங்களிப்புச் செய்த கலைஞர்களுள் மதுராந்தகம் ஜெகதாம்பாளின் வாழ்க்கை வரலாற்றையும் கலைப்பணியையும் விளக்கி எழுதுக. (20 புள்ளிகள்)

6.

1. இலங்கையில் நடனத்துறை வளர்ச்சிக்குப் பங்காற்றிவரும் நிறுவனங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)
2. அவற்றுள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த நிறுவனம் பற்றி விளக்கி எழுதுக. (18 புள்ளிகள்)

7. பின்வரும் கலைச்சொற்களைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

1. சொக்கரி
2. சங்கு
3. வசந்தன்கூத்து
4. ஒயிலாட்டம்

(4 x 5= 20 புள்ளிகள்)

8. பரதநாட்டியத்திற்கும் கண்டிய நடனத்திற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க. (20 புள்ளிகள்)